## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2022

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட ரூபா 3,940,298 தொகையான | சரக்கிருப்பு பதிவேட்டின் பதிவுகளை நாளதுவரையாக்கி சரிபார்ப்பதில் ஈடுபட்டுள்ள பணிச்சுமை காரணமாக, 2022.12.31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் நேரத்தில் பௌதீக மீதிகளுடனான கணக்கிணக்கத்தை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | உரிய காலத்தில் பௌதீக ரீதியான மீதிகளுடனான கணக்கிணக்கத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சரக்கிருப்பை சரக்கிருப்புப் பதிவேட்டின் மீதிகளுடன் இணக்கம் செய்து வேறுபாடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும், எதிர்காலத்தில் தொடங்கப்படும் களஞ்சிய முகாமைத்துவ முறைமையின் அறிமுகத்துடன் இது நீக்கப்படும். | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது 238 சரக்கிருப்பு உருப்படிகளின் கிரயம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதனால் நிறுவகத்தின் நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | இருப்புத்தாள்கள் தவறவிடப்பட்டதன் காரணமாக குறிப்பிடப்பட்ட உருப்படிகள் இருப்பு மதிப்பீட்டில் இருந்து தவறவிட்டன. 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளிற்கான முன்னைய அண்டு சீராக்கமாக, 238 சரக்கிருப்பு உருப்படிகளின் கிரயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். | எதிர்காலத்தில் ஒரு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் இருப்பு மதிப்பீடு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | சரக்கிருப்புக்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை நாளதுவரை பேணுவதற்கு சரக்கிருப்பு முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் இவை தொடர்பாக நிறுவகத்தால் சரக்கிருப்பு கட்டப்பாட்டு மட்டங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய முகாமைத்துவ முறைமை ஏற்கனவே இறுதி செய்யப்பட்டு அண்மைய எதிர்காலத்தில் நிலுவையில் உள்ளது, மேலும் இது சரக்கிருப்புக்களின் மீது சரியான கட்டுப்பாட்டை பேணுவதற்கு எங்களுக்கு உதவும். | சரக்கிருப்பு முகாமைத்துவ முறைமை முன்கூட்டியே அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் தொடர்பான குறியீடல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் நிலையான சொத்துக்களின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பான கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுடன் 2019 இல் குறியீடலை அறிமுகப்படுத்தினோம். எனினும், 2019 இற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், சரிபார்ப்பிற்காக வழக்கமான பதவியணியினரின் பௌதீக ரீதியான பார்வையிடலின் வரையறைகள்/ இயலாமை (கொவிட் 19, பதவியணியினர் பற்றாக்குறை) காரணமாக குறியீடப்பட்டிருக்கவில்லை. எனினும், நிலையான சொத்துக்களை உள்ளடக்கிய களஞ்சிய முகாமைத்துவ முறைமையின் அறிமுகத்துடன் இது முறைப்படுத்தப்படும். | நிலையான சொத்துகளின் குறியீடல் முறைமை 2019 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 13 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் நிறுவகத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் கொழும்பு மற்றும் அனுராதபுரத்தில் உள்ள இரண்டு காணிகளுக்கு நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தக் காணிகளின் உரிமைத்துவத்தை நிறுவகத்தின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்படி காணிகள் தொடர்பான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் வழங்கிய 2009.01.08 ஆம் திகதிய எச்ஆர்டி/ஜீ/31 ஆம் இலக்க கடிதத்தின் அடிப்படையில் கொழும்பு மற்றும் அனுராதபுரம் ஹோட்டல் பாடசாலைகளின் கட்டிடங்கள் கணக்குப் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டன. எனினும், குறித்த கடிதம் உரிய கட்டிடங்களின் காணிகள் குறித்து மௌனமாக இருந்ததுடன், இது வரையில் முழுமையான உரிமைத்துவங்கள் எதுவும் மாற்றப்பட்டிருக்கவில்லை அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) என்ற பெயரில் உரித்துறுதிகள் வழங்கப்படவில்லை. எனவே, அதற்கிணங்க காணிகளின் பெறுமதிகளை நாங்கள் இனங்கண்டிருக்கவில்லை. எனினும், உரிமைத்துவத்தை SLITHM இற்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்பதுடன் 2023 ஆம் ஆண்டிற்குள் காணி பெறுமதிகளை கணக்கு புத்தகங்களில் பதிவு செய்வோம். | அந்த காணிகளின் உரிமைத்துவத்தை SLITHM இற்கு மாற்றுவதற்கும், காணியின் பெறுமதிகளை முன்கூட்டியே கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வியாபார கடன்பட்டோர் மீதிகள் | 9,533, 361 | - | 9,533, 361 | சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சின் மத்தியஸ்தத்துடன் நிறுவனங்களுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்து தீர்த்துக்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்குள் அந்த மீதிகள் அனைத்தையும் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | மீதிகள் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| பெறவேண்டிய வைகள் | 5,396,778 | 6,512,810 | 1,116,032 | சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சின் மத்தியஸ்தத்துடன் நிறுவனங்களுக்கு இடையிலான மீதிகளை | மீதிகள் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இணக்கம் செய்து தீர்த்துக்கொள்வதற்கான தீமானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்குள் அந்த மீதிகள் அனைத்தையும் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| செலுத்த வேண்டியவை கள் | - | 9,023,930 | 9,023,930 | சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சின் மத்தியஸ்தத்துடன் நிறுவனங்களுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்து தீர்த்துக்கொள்வதற்கான தீமானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்குள் அந்த மீதிகள் அனைத்தையும் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | மீதிகள் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| அட்டுறு செலவினங்க ள் | 35, 013, 397 | 34,003,642 | 1,009,755 | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டியலில் மிகை/ பற்றாக்குறை நிதியேற்பாடுகளில் உள்ள தவறு காரணமாக அட்டுறு செலவினங்களில் வேறுபாடொன்று உள்ளது. 2023 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளில் முன்னைய ஆண்டு சீராக்கங்களின் கீழ் பிழைகளை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். | மீதிகள் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது திறைசேரியிடம் இருந்து முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 1,454,631 அறவிடமுடியாக் கடன்கள் பதிவழிக்கப்பட்டிருந்தன. மேலும், ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | ரூபா 1,454,631 அறவிடமுடியாக் கடன்பட்டோர் பொதுமுயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டில் 6.9 ஆம் பிரிவு பதிவழிப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டனர், மேலும், 2023 இறுதிக் | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு மறுபரிசீலனை செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டும். மேலும் அறவிடமுடியாக் |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்குகளுக்கான முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் தேவைப்பட்டால், அறவிடமுடியாகக் கடன் ஏற்பாடு மறுபரிசீலனை செய்யப்பட்டு திருத்தப்படும். | கடன் பதிவழிப்பிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 இல் சுற்றுலாப் பொலிஸ் பிரிவிடமிருந்து பெற வேண்டிய ரூபா 3,192,000 தொகையான வாடகை வருமானம் வருமானமாக இனங்காணப்பட்டு பெறவேண்டிய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும், இந்தத் தொகையின் அறவிடும் தன்மை நிச்சயமற்றதாக இருந்தது. எனினும், அதற்கான நட்டக்கழிவு பெறுமதி கணிப்பிடப்பட்டு நீக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், அவர்கள் வளாகத்தைப் பயன்படுத்துகின்ற போதிலும் 2015 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுவகத்தால் ரூபா 25,536,000 மொத்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அறவீட்டின் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு சுற்றுலாப் பொலிஸ் பிரிவிடமிருந்து (TPU) பெற வேண்டிய ரூபா 3,192,000.00 வாடகை வருமானத்தை பதிவழிப்பதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை நாங்கள் கோரியுள்ளோம். எனினும், TPU ஆல் கட்டிடத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக பொருத்தமான இறுதி தீர்மானம் எடுக்கப்படும் வரை கணக்கிலேயே அத் தொகையை வைத்திருக்குமாறு சபை அறிவுறுத்தியது. வாடகை கொடுப்பனவிற்கு நிர்வாகம் பொறுப்பேற்றிருக்காததால், 2014 இற்குப் பின்னர் விலைப்பட்டியலிடல் இடம்பெறவில்லை. | TPU ஆல் கட்டிடத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக முன்கூட்டியே இறுதி தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடன்பட்டோரின் அறவீடு மிகவும் மெதுவாக இருந்தது, இது 2022 ஆம் ஆண்டில் மொத்த கடன்பட்டோரில் 3 சதவீதம் ஆகும், மேலும் நிலுவைகளை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 08 வருடங்களுக்கும் மேலாக ரூபா 12 மில்லியன் தொகை நிலுவையாக இருந்தது. | முன்னைய காலங்களில் முறையற்ற கொடுக்கல்வாங்கலை பதிவுசெய்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதில் சிரமம் ஏற்பட்டது. மேலும், அமைச்சுக்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும் இந்த அறவீட்டின் தாமதத்திற்கு தாக்கமளித்தன. எனினும், 2023 ஆம் ஆண்டில் அந்த மெதுவான அறவீடுகளை தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுப்போம். | 2023 ஆம் ஆண்டில் கடன்பட்டோரை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டுக்கான ரூபா 330,000 தொகையான வாடகை வருமானத்தை இலங்கை மாநாட்டு பணியகத்திடம் இருந்து நாளதுவரை | இது தீர்க்கப்படும். | 2023 ஆம் ஆண்டில் வாடகை வருமான மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வைப்புக்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் ஆகியவற்றின் ரூபா 145,149,037 மொத்த மீதி தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் அனைத்து வைப்புக்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் ஆகியவற்றிலிருந்தான மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் நடவடிக்கையை எடுப்போம். | கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களை நேரடியாக கணக்காய்விற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டுக்கு முன்னரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,452,439 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரியை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய உண்மையான வற் தொகை எதுவும் காணப்படாததுடன் முறைமைக்கு தவறான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக செலுத்தப்பட வேண்டியவை ஏற்பட்டுள்ளன. முன்னைய பதிவுகளைச் சரிபார்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம், ஆனால் பகுப்பாய்வு செய்வதற்கு அதிக நேரம் எடுத்ததுடன் கணனியில் மீண்டும் எழுத முடியவில்லை. 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்போம். | 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | உபகட்டுநிதியானது அது வழங்கப்பட்ட நோக்கம் நிறைவடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 58 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 3,736,366 கூட்டுமொத்த தொகையான உபகட்டுநிதியை தீர்ப்பனவு | பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய குறைபாடுகள் காரணமாக, பெரும்பாலான வழங்குநர்கள் கொடுப்பனவின்றி பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க மறுத்ததுடன் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் கூறுவிலைகளை அனுப்புவதைக் கூட பெரும்பாலும் தவிர்த்தனர். எனவே | உபகட்டுநிதியானது எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவடைந்து 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்வதில் 21 நாட்கள் முதல் 143 நாட்கள் வரையான வீச்சிலான காலதாமதம் அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 911,000 கூட்டுமொத்த தொகையான உபகட்டுநிதி முன் அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 100,000 அதிகபட்ச உபகட்டுநிதி எல்லையை விஞ்சி 4 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது. | பல நடவடிக்கைகள் முற்பணங்கள் மூலம் கையாளப்பட வேண்டியிருந்தன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வழங்குநர்களால் வழங்கப்படும் சேவைகளின் சிக்கலான தன்மை காரணமாக தாமதங்கள் அவதானிக்கப்பட்டதுடன் திருத்தங்கள், பொருட்களை வழங்குதல் போன்றவற்றில் தாமதங்கள் ஏற்பட்டது. வேறு எந்தவொரு தெரிவும் இல்லாத போது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மாத்திரமே ரூபா 100,000 இற்கு மேற்பட்ட உபகட்டுநிதி ஏற்பாடு பயன்படுத்தப்படுகிறது, மேலும் கொடுப்பனவுகள் (கணக்கு பணம் பெறுபவர் காசோலைகள்) பதவியணி உறுப்பினர் ஒருவரின் பொறுப்பின் கீழ் வழங்குநர்களுக்கு குறிப்பாக மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOE) செயற்பாட்டு கையேடு<br>(i) 3.4 (ix) ஆம் பந்தி | விதிவிலக்கான சூழ்நிலைகளில் ஒரு பதிற்கடமை நியமனம் மேற்கொள்ளப்பட்டால் அது ஒரு வருடத்தை விஞ்சாத காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். எனினும், நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி) பதவியானது 2020 திசெம்பர் 01 | வெளியகத் தலைவீடுகள் மற்றும் விடயத்தைச் சரிசெய்து உத்தியோகபூர்வமாக நியமனத்தை வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலம் என்பன காரணமாக தாமதமானது. எனினும், நிரந்தர நியமனம் 2022 யூலை 5 இல் | பதிற்கடமை நியமனங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் பதிற்கடமை நியமனம் வழங்கப்படுமாயின், அது ஒரு வருடத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 2022 யூலை 04 வரையிலான 20 மாத காலப்பகுதிக்கு பதிற்கடமை நியமனத்துடன் நிரப்பப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டது. | மேற்படாத காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | 3.4 (x) ஆம் பந்தி | ஒவ்வொரு SOE இற்கும் ஒரு தொடர் திட்டம் இருப்பது அவசியம். எனினும், நிறுவகம் நாளதுவரை தொடர் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் காரணமாக பதவியணியினர் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் எங்களால் தொடர் திட்டத்தை தயாரிக்க முடியவில்லை. எனினும், பதவியணி உறுப்பினர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக பதவியணியினர் பயிற்சியைத் தொடர்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் வெற்றிடமாக உள்ள பதவிகளின் பணியைக் கையாள்வதற்கு தற்காலிகமாக பதவியணியினரை ஒதுக்கீடு செய்துள்ளோம். | தொடர் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.8 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணிக்கொடை கொடுப்பனவு நோக்கத்திற்காக பேணப்பட்ட ரூபா 17,365,170 முதலீடு அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காது சாதாரண சேமிப்புக் கணக்காகத் தொடர்ந்து காணப்பட்டது. இது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த பணிக்கொடை ஏற்பாட்டில் 30 சதவீதமாக இருந்தது. மேலும், மேற்படி முதலீடு நிலையான வைப்புக்களில் அல்லது சாதாரண சேமிப்புக் கணக்கு வட்டியை விட அதிக வட்டியைப் பெறக்கூடிய ஆபத்து இல்லாத முதலீடுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சேமிப்புக் கணக்கை மூடுவதற்கும், BOC இன் நடைமுறைக் கணக்கிற்கு (பணிக்கொடை தொடர்பான பணிகளுக்காக புதிதாகத் திறக்கப்பட்ட கணக்கு இல.) நிதியை மாற்றுவதற்கும் இந்தக் கணக்கிலிருந்து குறுகிய கால முதலீடுகளைச் செய்வதற்கும் முகாமைத்துவ சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நிலையான வைப்புக்களில் அல்லது சாதாரண சேமிப்புக் கணக்கு வட்டியை விட அதிக வட்டியைப் பெறக்கூடிய ஆபத்து இல்லாத முதலீடுகளில் முதலீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 112,016,893 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 176,422,955 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 288,439,848 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 253,665,881 ஆல் அதிகரித்தமை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 56,894,987 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டு உலக சுற்றுலா தினத்திற்கு இணையான உணவுத் திருவிழா, அவசரகால நிகழ்ச்சித்திட்டமாக முறையான கிரய-நலன் பகுப்பாய்வின்றி 2022 செப்தெம்பர் 27 இல் நிறுவகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. | 2022 செப்தெம்பர் 27 இல் நடாத்தப்பட்ட உணவுத் திருவிழா தொடர்பான முழுமையான அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முறையான கிரய நலன் பகுப்பாய்வின்றி நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்படக் கூடாது. |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 இல் தகவல் முறைமையொன்றை உருவாக்குவதற்கு ரூபா 3,771,216 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அது நிறுவகத்தின் தேவைப்பாடுகளுடன் பொருந்தாமையால் கைவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடைமுறை வேலையிலிருந்து அப் பெறுமதியை நீக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட தொகை ரூபா 3,771,216 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் இந்த தொகையில், ரூபா 1,508,486 செலுத்தப்பட்டிருக்கவில்லை (பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது). மேலும் முறைமை வெற்றியடையாததாலும் வழங்குநரிடமிருந்து எந்தப் பதிலும் வராததாலும் அதைத் திரும்ப எழுதுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறை வேலையிலிருந்து ரூபா 2,262,730 மிகுதித் தொகையை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்போம். மேலும் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்குகளில் சீர்செய்யப்படும். | திட்டமிட்ட வேலைகளில் எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக களஞ்சியக் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு நிறுவகத்தின் களஞ்சியங்களில் பணிக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக தற்காலிக மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பல காலப்பகுதிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், இரண்டு அலுவலக உதவியாளர்கள் அவர்களது | தேவையான பதவிநிலைகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரத்தை கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | களஞ்சியங்களில் உள்ள குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு களஞ்சியக் காப்பாளர் ஒருவர் |

| | | |
|---|---|---|
| பாதுகாப்பின் கீழ் நிதிப் பிரிவில் பேணப்பட வேண்டிய இருப்பு பதிவேடு உள்ளிட்ட அனைத்துப் பதிவேடுகளுடன் களஞ்சியங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | முன்கூட்டியே நியமிக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை நடைமுறையின் கீழ் அந்தப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக 60 சந்தர்ப்பங்களில் ரூபா 4,199,160 தொகை உபகட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக, பல நிறுவனங்கள் கேள்விகள் அல்லது கூறுவிலைகளை வழங்கவில்லை, மேலும் கடனிற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதை நிறுத்தியது. துரிதமான விலையேற்றம் காரணமாக இருந்தும் மாணவர்களின் பயிற்சிக்கான மூலப்பொருள் தேவைப்பாட்டிற்கு கொடுக்கப்பட்ட கடன் வரம்பு போதுமானதாக இல்லாததால் மூலப்பொருட்கள் உட்பட பெரும்பாலான பொருட்களை காசிற்கு கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. அதே வழியில், சிறிய பெறுமதியிலான மூலதன பொருட்கள் மற்றும் சிறிய பழுதுபார்ப்புகளை முன்பணங்களின் கீழ் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. எனினும், கடன் வரம்புகள், மீளளிக்கத்தக்க வைப்புக்கள் போன்றவற்றின் அதிகரிப்பு மூலம் 2023 இல் முற்பணங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கிறோம். | சிறிய கொள்வனவு தவிர ஏனைய ஒவ்வொரு கொள்வனவிலும் பெறுகை நடைமுறை பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந் நிறுவகத்தின் நூலகத்தை புனரமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 6,268,941 தொகை 03 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறை வேலைக் கணக்கில் இருந்தும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தி செய்தல் உட்பட உறுதிப்படுத்தப்பட வேண்டிய சில விடயங்கள் உள்ளதால் நூலகப் புனரமைப்புக்காக செலுத்தப்பட்ட ரூபா 6,268,941 தொகை நடைமுறை வேலையின் கீழ் பேணப்படுகின்றன, எனினும், 2023 ஆம் ஆண்டில் அதை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். | செயற்திட்டங்கள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.6 வாகன அணி முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டு பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெறப்பட்டு நிறுவகத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா | சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சின் மூலம் GH 129 இலக்கமிடப்பட்ட குறிப்பிடப்பட்ட வாகனத்தின் | வாகனத்தின் உரிமைத்துவத்தை முன்கூட்டியே மாற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 2,200,000 பெறுமதியான வாகனத்தின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமைத்துவத்தை மாற்றுவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளோம். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கையளிக்கப்பட்ட ரூபா 860,000 பெறுமதியான வாகனம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கணக்காய்வின் போது பௌதீக ரீதியாக சரிபார்க்க முடியாதிருந்தது. | வாகன இல. 62-100 (வான்) தொடர்பான ஆவணங்களைக் கண்டறிவதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அதன் பிரகாரம் குறித்த வாகனம் தொடர்பான முழுமையான அறிக்கையை நாங்கள் இரண்டு வாரங்களுக்குள் வழங்குவோம். | தொடர்புடைய ஆவணங்கள் முன்கூட்டியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |